## குமரி - கோவளம் கடற்கரையில் அதிகாலையில் நடைபயிற்சியின்போது

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீனவர்களிடம் வாக்குச் சேகரித்த காட்சி!

## “எங்கள் வாக்கு உதயசூரியனுக்கே” என உறுதியளித்தனர்!





கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு நேற்று முன்தினம் (4.4.2026) வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான . மு.க. ஸ்டாலின் அவர்கள், கோவளம் கடற்கரைப் பகுதியில் நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்குள்ள வாக்காளர் பெருமக்களை சந்தித்து, வாக்கு சேகரித்தார். உடன் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், கன்னியாகுமரி தொகுதி கழக வேட்பாளருமான ரெ. மகேஷ் உள்ளார்.

### சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கை!

# இந்தியைத் திணிக்கும் கபட நாடகத்தின் உச்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஏப்.6-**

**“சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தப்போவதாக ஒன்றிய அரசு அறிவித்திருப்பது இந்தியைத் திணிக்கும் முயற்சியாகும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

தேசியக் கல்விக் கொள்கை 2020- ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் என்பது சாதாரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலான, நன்கு திட்ட மிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும்.

“இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்” என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப் பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான NDA அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. “மும்மொழிக் கொள்கை” என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும்.



**பாகுபாட்டை வெளிப்படுத்துகிறது!**

தென் மாநில மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி உள்ளிட்ட மொழிகளைக் கட்டாயமாகப் படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசார்பையும் - பாகுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

இந்த முரண் வெளிப்படையானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாக்க முடியாத தொடர்ச்சியாகப் போதிய தமிழாசிரியர்களை நியமிக்கத் தவறிய இதே ஒன்றிய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்!

**உள்நோக்கம் கொண்டது!**

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மைக் களநிலவரத்தை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? இந்தச் செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வித் துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்விதத் திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது.

இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சம வாய்ப்புகள் குறித்த கேள்விகளுமாகும். இந்தி பேசும் மாணவர்களைக் கட்டமைப் புரீதியான சலுகைகளை அளித்து, உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களுக்கிடையே மேலும் ஏற்றத் தாழ்வுகளையே இது உண்டாக்கும்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, அனிமேஷன் விஷுவல் எஃபெக்ட்ஸ் கேமிங் காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் அவர்களது திறனை மேம்படுத்தி, அவர்களது அறிவியல் பார்வையையும் திறனாய்வுச் சிந்தனையையும் ஊக்குவிக்க வேண்டும். மாறாக, இத்தகைய பிற்போக்குத்தனமான, இறுக்கமான மொழிச் சுமை அவர்களது முன்னேற்றத்தைத் தடுப்பதாக உள்ளது.

**அவமதிக்கும் செயல்!**

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தொடர்ச்சியாக எழுப்பிய நியாயமான - ஜனநாயகப்பூர்வமான கவலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தியைத் திணிப்பதில் ஒன்றிய அரசு மும்முரமாக இருப்பது தெரிகிறது. இந்தச் செயல், கூட்டுறவுக் கூட்டாட்சி யியலுக்கு எதிரானது, கோடிக்கணக்கான இந்தியர்களின் மொழி அடையாளங்களை நேரடியாக அவமதிக்கும் செயல்.

இந்தியாவின் வலிமை என்பது, பன்முகத்தன்மையில்தான் இருக்கிறதே தவிர, திணிக்கப்படும் ஒற்றைத்தன்மையில் இல்லை. இந்தச் சமநிலையைக் குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் தவறானவை மட்டுமல்ல, ஆபத்தானதுமாகும். நம் நாட்டின் அடிப்படையான பன்மைத்துவத்தையே தாக்கும் இத்தகைய கொள்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வும், அதன் NDA கூட்டணிக் கட்சிகளும் இந்தத் திணிப்பை ஏற்றுக் கொள்கின்றனரா? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒரு முறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா?

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டா லின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

### கிறிஸ்தவ அமைப்புகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதால்

# வெளிநாட்டுப் பங்களிப்பு சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும்!

## பிரதமருக்கு – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஏப்.6-**

**கிறிஸ்தவ அமைப்புகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், மத்திய அரசின் வெளிநாட்டு பங்களிப்பு சட்ட திருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என்று பிரதமருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து பிரதமர் நரேந்திரமோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:-

**தானாக ரத்தாகும்**

மத்திய அரசின் வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்கு முறை) (எப்.சி. ஆர்.ஏ.) சட்ட திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியிருப்பது குறித்து, ஆழ்ந்த வேதனையுடனும், கவலையுடனும் உங்களுக்கு இந்தக்கடிதத்தை எழுதுகி றேன். இந்தியா முழுவதிலுமுள்ள இந்த மசோதாவின் பல அம்சங்கள், கிறிஸ்தவ சமூகத்தினரை கொந்தளிப்பு மற்றும் மனவருத்தத்திற்குள் ஆழ்த்தி இருக்கிறது. அந்த அம்சங்கள் எவை என்றால்,

எப்.சி.ஆர்.ஏ. பதிவில், நடைமுறை காலதாமதம், நிர்வாக மறுப்பு அல்லது அரசு உரிய நேரத்தில் செயல்படத் தவறுதல் போன்ற காரணங்கள் கூட ஒரு அமைப்பின் பதிவை தானாகவே ரத்து செய்துவிடும்.

**சொத்துகள் பறிமுதல்**

பதிவு ரத்து செய்யப்பட்டாலோ அல்லது உறுதி செய்யப்படாததாக கருதப் பட்டாலோ, முழுவெளிநாட்டுப் பங்களிப்பு நிலுவைத்தொகையும், பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், தங்கும் விடுதிகள், நிலம் மற்றும் கட்டிடங்கள் உள்பட அந்த நிதியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒவ்வொரு சொத்தும், அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.



பதிவை புதுப்பிக்கும் செயல்முறையே தெளிவற்றதாகவும், வெளிப்படைத்தன்மையற்றதாகவும், தன்னிச்சையானதாகவும் உள்ளது. குறைபாடுகளை தெரிவிக்க மறுப்பது அல்லது நியாயமான விசாரணைக்கு வாய்ப்பளிக்காதிருப்பது போன்றவை, சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு இயற்கை நீதியை மறுப்பதாக உள்ளது. வெளி நாட்டுப் பங்களிப்புகளுடனும், உள்நாட்டு ஆதாரங் களில் இருந்தும், உருவாக்கப்பட்ட சொத்துகள் முழுமையாகப் பறிமுதல் செய்யப்படும் என்ற விதிமுறை இன்னும் அதிக கவலையளிப்பதாக உள்ளது.

**சட்ட தாக்குதல்**

இந்த கொடுமையான மசோதா மூலம் மத்திய அரசு தனது விருப்பப்படி, எந்த வொரு முறையான சட்ட நடைமுறையும் இல்லாமலேயே, தேவாலயம், பள்ளி அல்லது ஆஸ்பத்திரி என எந்தவொரு சொத்தின் எப்.சி.ஆர்.ஏ. பதிவைரத்து செய்யவும், அதன் சொத்துகளை கையகப்படுத்தவும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. இதனால் இந்தியாவின் தொண்டு நிறுவனங்கள் சிதைக்கப்படும்.

எனவே, இந்த மசோதா இந்திய அரசியலமைப்பின் 25, 29, 30 மற்றும் 300 ஏ ஆகிய பிரிவுகளுக்கு முற்றிலும் முரணானதாக உள்ளது. மேலும் இது சிறுபான்மையினரால் நடத்தப்படும் நிறுவனங்கள் மீதான சட்டப்பூர்வமான தாக்குதலாகும்.

**பெரும் அச்சுறுத்தல்**

தலித்துகள், பழங்குடியினர் மற்றும் கிராமப்புற ஏழைகள் உள்பட விளிம்பு நிலைப் பிரிவினருக்கு கல்வி மற்றும் சுகா தாரத்தை வழங்கும் தொண்டு நடவடிக்கைகளுக்கான நிதியுதவியை முற்றிலுமாகத் துண்டிப் பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு நிதியைச் சார்ந்துள்ள தொண்டு நிறுவனங்களுக்கு இந்த மசோதா, பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது. இதனால், உடனடியாக பாதிக்கப் படுபவர்கள், அந்த நிறுவனங்கள் மட்டுமல்ல, கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக இந்த நிறுவனங் களைச்சார்ந்திருக்கும் லட்சக்கணக்கான நலிவடைந்த குடிமக்களும் அடங்குவார்கள்.

**மசோதாவை திரும்பப் பெற வேண்டும்**

இந்த அமைப்புகளால் வழங்கப்படும் கல்வி, மருத்துவம் மற்றும் தொண்டு சேவை களுக்கு மாற்றாக மத்திய அரசிடமோ அல்லது மாநிலங்களிடமோ திறன் இல்லை. இதன் விளைவாக, நாடு முழுவதும் அடித்தள நல உள் கட்டமைப்பு சரிந்துவிடும். மத சுதந்திரம் மற்றும் சமூக தொண்டு ஆகியவற்றின் மீது நடத்தப்படும் தாக்குதல்தான் இந்த மசோதா. இந்த சட்டம் இயற்றப்பட்டால்,அது இந்தியாவின் ஜனநாயக, மதச்சார்பற்ற மற்றும் மனிதாபிமானப் பாரம்பரியத்தில் ஒரு நிரந்தர வடுவை ஏற்படுத்திவிடும். எனவே இந்த மசோ தாவை உடனடியாக திரும்பப் பெறவேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சரும், மேற்கு தொகுதி வேட்பாளருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், தே.மு.தி.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, ம.தி.மு.க. மற்றும் மக்கள் நீதி மையம் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், துரை வைகோ எம்.பி. உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை சட்ட மன்ற தொகுதி நாகை நகரம், நாகூர் நகரம், நாகை வடக்கு ஒன்றியம் ஆகியவற்றின் கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் நாகையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் தொகுதி வேட்பாளர் பேராசிரியர் எம்.எச.ஜவாஹிருல்லா, நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தொகுதி பார்வையாளர் ஆர்.அருள்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.